# ‘விடியல் பயணம்’ மூலம் பெண்களுக்கு மாதம் ரூ.1200 வரை சேமிப்பு என்கிறது, தனியார் ஆய்வு!

## 5 வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள் – மாதிரி வட்டார போக்குவரத்து அலுவலகங்களாக தரம் உயர்த்தப்படும்!

## தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் 50 பேருந்துப் பணிமனைகளில் ரூ.75 கோடி செலவில் உள்கட்டமைப்புகள் புதுப்பிக்கப்படும்!

## அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் பதிலுரை... 12 ஆம் பக்கத் தொடர்ச்சி

இந்த ஆட்சி அமைந்த பிறகு இந்தப் பணிகளெல்லாம் படிப்படியாக நடைபெற்று வருகின்றன.

### மின்சாரப் பேருந்துகள்!

அதேபோன்று, சென்னை மாநகரத்தில் மின்சாரப் பேருந்துகள் இயக்கப்படுகின்றபோது, ஒரு மிகப்பெரிய மாற்றம் நிகழும். அந்தப் பேருந்துகளை ஒப்பந்த அடிப்படையில் ஏன் இயக்க வேண்டும் என்று உறுப்பினர் அருண்குமார் அவர்கள் கேட்டார்கள். நான் அதற்கான காரணத்தையும் கூறினேன். நம்மிடத்தில் டீசல் பேருந்துகளைப் பராமரிப்பதற்கான பணியாளர்கள்தான் இருக்கிறார்கள். மின்சாரப் பேருந்துகளை வாங்குகின்றபோது, அதைப் பராமரிப்பதற்கான பணியாளர்கள் நம்மிடம் இல்லாத காரணத்தினால், அவற்றை எந்த நிறுவனம் தயாரிக்கின்றதோ, அந்த நிறுவனமே அதன் பராமரிப்புப் பணிகளையும் மேற்கொள்ள வேண்டும் என்ற டெண்டர் ஒப்பந்த அடிப்படையில்தான் இப்பணிகளை மேற்கொள்ளவிருக்கிறோம். மின்சாரப் பேருந்துகளின் விலையும் கூடுதலாக இருக்கிறது. அவற்றில் ஒரு சிறு பிரச்சினை ஏற்பட்டாலும் மிகப்பெரிய அளவில் பாதிப்பு ஏற்பட்டு, அதிக செலவினம் வரும் என்ற காரணத்தினால்தான் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இன்றைக்கு அவரே குறிப்பிட்டதைப்போல, சென்னை மாநகரத்தில் பெரும்பாக்கம், வியாசர்பாடி, தண்டையார்பேட்டை, பூந்தமல்லி மற்றும் சென்ட்ரல் ஆகிய பணிமனைகளிலிருந்து முதற்கட்டமாக 600 பேருந்துகள் இயக்கப்படவுள்ளன. அதற்கு அடுத்தகட்டமாக 650 பேருந்துகள் மக்களுடைய பயன்பாட்டிற்கு வரவிருக்கின்றன.

அதேபோன்று, ஊதிய ஒப்பந்தப் பேச்சுவார்த்தை முடிக்கப்படாமல் இருப்பதாகக் குறிப்பிட்டார். அவர்களுடைய ஆட்சிக் காலத்தில்தான், ஊதிய ஒப்பந்தப் பேச்சுவார்த்தையை முடிக்காமல் நிறுத்திவிட்டுப் போனார்கள். மூன்று ஆண்டுகளுக்குள் முடிக்க வேண்டிய ஊதிய ஒப்பந்தப் பேச்சுவார்த்தையை அன்றைக்கிருந்த அ.தி.மு.க. அரசு நான்கரை ஆண்டுகளைக் கடந்தும் முடிக்காமல் சென்றுவிட்டது. முதல்வர் அவர்களுடைய தலைமையிலான ஆட்சி அமைந்த பிறகு, இந்தத் திராவிட மாடல் ஆட்சி அமைந்த பிறகு, அண்ணன் ராஜகண்ணப்பன் அவர்கள் இரண்டு முறை பேச்சுவார்த்தை நடத்தியதற்குப் பிறகு நான் மூன்றுமுறை பேச்சுவார்த்தை நடத்தி அந்த ஒப்பந்தத்தை இறுதி செய்தோம். ஏதோ யாருக்கும் தெரியாமல் மூன்று ஆண்டுகளை நான்கு ஆண்டுகளாக அறிவித்தோம் என்று அவர் கூறினார். பெரும்பாலான தொழிற்சங்கங்கள் கையெழுத்திட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில்தான் மூன்று ஆண்டுகளை நான்கு ஆண்டுகள் என மாற்றியமைத்திருக்கிறோம்.

### ஊதிய ஒப்பந்தப் பேச்சு வார்த்தை!

இன்னும் சொல்லப்போனால், முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் வழங்கப்பட்ட pay matrix என்ற முறை உங்களுடைய ஆட்சிக் காலத்தில் சீர்குலைக்கப்பட்டது. சீனியர், ஜூனியர் என்ற வித்தியாசம் இல்லாமல் எல்லோருக்கும் ஒரே விகிதத்தில் சம்பளம் வழங்கப்பட்டது. மீண்டும் சீனியர்களுக்கும், ஜூனியர்களுக்கும் காலவரன்முறை வித்தியாசத்தின்படி சம்பளம் வழங்க வேண்டும் என்ற கோரிக்கையையும் ஏற்றுக்கொண்டு, முதலமைச்சர் அவர்கள் அதை நடைமுறைக்குக் கொண்டுவரக் கூறினார்கள். அதன் காரணமாக, ஒவ்வொரு மாதமும் 40 கோடி ரூபாய் கூடுதலாக செலவாகும் என்ற சூழல் வந்தது. இருப்பினும், தொழிலாளர்களுடைய நலன் கருதி, அதனை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டதன் அடிப்படையில், அந்த ஊதிய ஒப்பந்தப் பேச்சுவார்த்தை மிகச் சிறப்பான முறையில் நிறைவேறியது. அடுத்த ஊதிய ஒப்பந்தப் பேச்சுவார்த்தைக்கான பணிகள் துவங்கப்பட்டு, ஒருகட்ட பேச்சுவார்த்தை அதிகாரிகளால் நடத்தப்பட்டிருக்கிறது. அடுத்தகட்ட பேச்சுவார்த்தை குறித்து அறிவிக்கப்பட்டபோது, முன்னாள் பாரதப் பிரதமர் மரியாதைக்குரிய மன்மோகன் சிங் அவர்கள் மறைவுற்ற காரணத்தால், அப்பேச்சுவார்த்தை தள்ளி வைக்கப்பட்டது. அந்தப் பேச்சுவார்த்தையை மீண்டும் கடந்த மாதம் நான் கலந்துகொண்டு நடத்தியிருக்கிறேன். தற்போது சட்டமன்றக் கூட்டத் தொடர் நடைபெறுகின்ற காரணத்தால், அடுத்தகட்ட பேச்சுவார்த்தையை சட்டமன்றக் கூட்டத் தொடர் முடிவுற்ற பிறகு நடத்தலாம் என்று தொழிற்சங்கங்களுக்கு தெரிவித்திருக்கின்றோம். எனவே, இந்த சட்டமன்றக் கூட்டத் தொடர் முடிவுற்ற பிறகு, அந்தப் பேச்சுவார்த்தை இறுதி செய்யப்பட்டு, தொழிலாளர்களின் கோரிக்கை நிறைவேற்றப்படும் என்பதை இந்தநேரத்தில் அன்போடு உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### மினி பேருந்து திட்டம்!

அதேபோன்று, முதலமைச்சர் அவர்களுடைய மிக முக்கியமான திட்டத்தை இந்த அவைக்குத் தெரியப்படுத்த நான் விரும்புகிறேன். முத்தமிழறிஞர் அவர்கள் தலைவர் அவர்கள், பெரிய பேருந்துகள் இயக்க முடியாத சிறிய, குறுகிய சாலைகள் கொண்ட குக்கிராமங்களுக்கும் போக்குவரத்து சேவை வழங்க வேண்டும் என்று மினி பேருந்து திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அந்த மினி பேருந்து திட்டம் கடந்தகால ஆட்சியாளர்களால் பாராமுகமாக கண்டுகொள்ளாமல் இருந்த காரணத்தால் மினி பேருந்து உரிமையாளர்கள் பல்வேறு சிக்கல்களைச் சந்தித்தார்கள். எனவே, மினி பேருந்து உரிமையாளர்கள் முதலமைச்சர் அவர்களைச் சந்தித்து தங்களுடைய கோரிக்கைகளை வைத்தார்கள். அந்தக் கோரிக்கைகளையும் ஏற்றுக்கொண்டு, இன்னும் கூடுதல் சேவை தேவைப்படுகின்ற, 100 குடியிருப்புகளுக்கும் குறைவாக இருக்கின்ற குக்கிராமங்களுக்கு பேருந்து சேவை வழங்குவதற்கு முதலமைச்சர் அவர்கள் அந்த மினி பேருந்து திட்டத்தை மறுசீரமைக்க வேண்டும் என்று உத்தரவிட்டதன் அடிப்படையில், சம்பந்தப்பட்டவர்களிடம் கருத்துகள் கேட்கப்பட்டு, புதிய மினி பேருந்து திட்டம் 2024 அறிவிக்கப்பட்டிருக்கிறது. இதன் மூலமாக அதிகபட்ச வழித்தட தூரம் 25 கி.மீ. ஆக நீட்டிப்பு வழங்கப்படவிருக்கிறது. அவற்றில், 65 சதவிகிதம் பேருந்து வசதி இல்லாத, சேவை வழங்கப்படாத சாலையாக இருக்க வேண்டும் என்றும், 35 சதவிகிதம் பேருந்துகள் இயங்குகின்ற சேவை உள்ள பகுதியாக இருக்க வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது. அதேபோன்று, அனுமதிக்கப்பட்ட வழித்தடத்தில் சேருமிடம் 1 கிலோ மீட்டருக்குள்ளாக நூலகங்களோ, மருத்துவமனைகளோ, மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகமோ, வட்டாட்சியர் அலுவலகமோ, உயர்நிலைப் பள்ளிகளோ இருந்தால், அந்த தூரத்தையும் நீட்டித்து, போக்குவரத்து சேவையை மக்களுக்கு வழங்க வேண்டும் என்று முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்கள். இந்த அடிப்படையில், திட்ட வரைவு வெளியிடப்பட்டு, மினி பேருந்து திட்டம் 2024-ல் புதிதாக விண்ணப்பிப்பவர்களுக்கான அந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட பிறகு, அது தமிழ்நாட்டில் மிகப்பெரிய வரவேற்பை பெற்று, 1,842 பேர் புதிதாக மினி பேருந்துகளை இயக்குவதற்கு விண்ணப்பித்தார்கள்; அவர்களுக்கு அனுமதியும் வழங்கப்பட்டிருக்கிறது.

ஏற்கெனவே 2,053 வழித்தடங்களில் மினி பேருந்துகள் இயங்கிக் கொண்டிருக்கிறது. இந்த 1,842 புதிய வழித்தடங்களில் முதற்கட்டமாக முதலமைச்சர் அவர்கள் மே மாதம் இரண்டாம் வாரத்தில் கொடியசைத்து அந்த மினி பேருந்து புதிய திட்டத்தையும் தொடங்கவிருக்கிறார்கள்.

### 19 விருதுகள்!

எனவே, இத்தகைய சிறப்புகளோடு இயங்கி வருகின்ற இந்தத் துறையின் செயல்களை பாராட்டி, ஒன்றிய அரசின் மூலமாக மாநில சாலை போக்குவரத்துகளின் கூட்டமைப்பு மூலமாக சமீபத்தில் விருதுகள் வழங்கப்பட்டன. இங்கே பேசுகின்றபோது, மயிலாடுதுறை சட்டமன்ற உறுப்பினர் S. ராஜகுமார் அவர்களும் அதனை குறிப்பிட்டார்கள். இந்தியாவில் 70 மாநில போக்குவரத்துக் கழகங்கள் இருக்கின்றன. அந்த 70 மாநில போக்குவரத்துக் கழகங்களுக்கான விருதுகளில் 19 விருதுகளை நம்முடைய போக்குவரத்து நிறுவனங்கள் பெற்றிருக்கின்றன. இது கிட்டத்தட்ட 28 சதவிகித விருதுகளாகும். (மேசையைத் தட்டும் ஒலி) இன்னும் சொல்ல வேண்டுமானால், technical ஆக வழங்கப்படுகின்ற விருதுகளில், 70 சதவிகித விருதுகளை நம்முடைய தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் பெற்றிருக்கின்றன. இதில் மாநகர போக்குவரத்துக் கழகம் சிறந்த சாலைப் பாதுகாப்பு நடைமுறைக்கான விருது, நிதி நடைமுறைக்கான விருது, அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் பணியாளர் செயல்திறனுக்கான முதல் இடம், டிஜிட்டல் பரிவர்த்தனைக்கான முதல் இடம், வாகன பயன்பாட்டிற்கான இரண்டாம் பரிசு பெற்றிருக்கிறது. அதேபோல், விழுப்புரம் அரசுப் போக்குவரத்துக் கழகம் எரிபொருள் செயல்திறனுக்கான விருதில் இரண்டாம் இடத்தையும், சேலம் போக்குவரத்துக் கழகம் எரிபொருள் செயல்திறனுக்கான விருதில் முதல் பரிசையும், சிறந்த சாலைப் பாதுகாப்பு நடைமுறைக்கு புறநகர் பிரிவு முதல் இடத்தையும், நகர்புற பிரிவு ஒரு பரிசையும், வாகன பயன்பாட்டிற்கான விருதில் முதல் இடத்தையும் பெற்றிருக்கிறது. அதேபோல், கும்பகோணம் அரசுப் போக்குவரத்துக் கழகம் எரிபொருள் செயல்திறனுக்கான புறநகர் பிரிவில் முதல் பரிசையும், நகர்புறத்திலேயும் முதல் பரிசு, அதேபோல் டயர் செயல்திறனுக்கான புறநகர் பிரிவில் இரண்டாம் பரிசு, நகர்புற பிரிவில் முதல் பரிசு, வாகன பயன்பாட்டிற்கு முதல் பரிசு என்று பெற்றிருக்கிறது. அதேபோல், மதுரை அரசுப் போக்குவரத்துக் கழகம் டயர் செயல்திறனுக்கான புறநகர் பிரிவில் முதல் பரிசு, நகர்ப்புறத்திற்கு இரண்டாம் பரிசும், எரிபொருள் செயல்திறனுக்கான விருதில் நகர்புறப் பிரிவில் இரண்டாம் பரிசு, வாகன பயன்பாட்டிற்கான விருதில் இரண்டாம் பரிசு என்று பெற்றிருக்கிறது. இந்த விருதுகளெல்லாம் இன்றைக்கு தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களுடைய செயல்பாட்டிற்காகக் கிடைத்திருக்கின்ற விருதகள். ஓராண்டு விருது பெற்றுவிட்டால் போதுமா என்று நீங்கள் கேட்கலாம்.

### வழிகாட்டி புத்தகம்!

அந்த ஓராண்டு விருதைத் தாண்டி, நம்முடைய அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கு எப்படி செயல்படுகின்றது என்பதற்குக் கிடைத்த ஓர் அத்தாட்சிதான் இந்தப் புத்தகம். பேரவைத் தலைவரிடத்தில் ஏற்கெனவே அனுமதி பெற்றுத்தான் உங்களிடம் காண்பிக்கின்றேன். யாருக்காவது வேண்டுமென்றால், இதனுடைய பிரதியைக் கொடுக்க தயாராக இருக்கிறேன். ASRTU-Association of State Road Transport Undertakings. அதாவது இந்தியாவில் இருக்கிற அரசுப் போக்குவரத்துக்கான இந்தக் கூட்டமைப்பு மூலமாக தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களுடைய செயல்பாடுகளை பார்த்து, அவர்கள் இரண்டு வெளி மாநில அலுவலர்களை இங்கே அனுப்பி, நம்முடைய அரசுப் போக்குவரத்துக் கழகங்களுடைய பல்வேறு பணிமனைகளுக்கு நேரடியாகச் சென்று ஆய்வு செய்து, அவற்றையெல்லாம் தொகுத்து ஒரு புத்தகமாக வெளியிட்டிருக்கிறார்கள். இந்தப் புத்தகம், இந்தியாவிலிருக்கிற எல்லா போக்குவரத்து நிறுவனங்களுக்கும் ஒரு கையேடாக, வழிகாட்டிப் புத்தகமாக அவர்கள் வழங்கவிருக்கிறார்கள். இது நாம் தயாரித்தது அல்ல. அனைத்து போக்குவரத்துக் கழகங்களும் இணைந்து அந்தக் கூட்டமைப்பு தயாரித்திருக்கின்ற புத்தகம். ஒவ்வொரு பணிமனையிலும் எப்படி tyre பராமரிக்கப்படுகிறது? எப்படி பேருந்து பராமரிக்கப்படுகிறது? எந்தவிதத்தில் பணியாளர்கள் பணியாற்றுகிறார்கள்? என்பதையெல்லாம் அவற்றின் புகைப்படங்களோடு அவர்கள் வெளியிட்டு, ஒரு பெருமையை நம்முடைய தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கு வழங்கியிருக்கிறார்கள் என்றால், நம்முடைய போக்குவரத்துத் துறையில் பணியாற்றுகின்ற துறைச் செயலாளர், மேலாண் இயக்குநர்கள், அங்கேயிருக்கின்ற பொறியாளர்கள், ஓட்டுநர், நடத்துநர், தொழில்நுட்ப பணியாளர் என்று அத்தனை பேரும் ஒரு கூட்டு முயற்சியாக ஒரு மிகச் சிறந்த சேவையை தமிழ்நாட்டில் வழங்குகின்ற காரணத்தினால்தான், இந்தச் சேவையை மற்ற மாநிலங்கள் பின்பற்றுவதற்கு இந்த நூல் வெளியிடப்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, இத்தகைய சிறப்போடு நம்முடைய போக்குவரத்துக் கழகங்கள் இன்றைக்கு செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன.

இதில் ஒரு சில உறுப்பினர்களின் கோரிக்கை குறித்து தெரிவிக்கிறேன். நம்முடைய திருவண்ணாமலை மாவட்டத்தில் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் தொடர்ந்து சொல்லிக் கொண்டிருந்தார்கள். கலசப்பாக்கம் தொகுதியில் அதன் சட்டமன்ற உறுப்பினர் அவர்களும் தொடர்ந்து சொல்லிக் கொண்டிருந்தார்கள். எலத்தூர், மோட்டூர் என்ற ஊராட்சியில் ஒரு போக்குவரத்துப் பணிமனை அமைப்பதற்கான பணிகள் முழுவதும் முடிக்கப்படாமல் இருக்கிறது. அதில் இன்னும் சில பணிகள் முடிப்பதற்கு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து வழங்குவதாகக் கூறியிருக்கிறார். அந்த நிதி வழங்கி, அந்தப் பணி முடிவுற்றால், அங்கே ஒரு tyre unit கொண்டு வருவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்ற செய்தியை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல், பல்வேறு பணிமனைகளை சீரமைக்க வேண்டுமென்று பல சட்டமன்ற உறுப்பினர்களும் கோரிக்கை வைத்துக் கொண்டிருக்கிறீர்கள்.

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலே அதைக் கொடுத்தால் சரியாக இருக்குமென்ற கோரிக்கையை இந்த நேரத்தில் நான் வைக்கின்ற நேரத்தில், பேரவைத் தலைவர் அவர்கள் ரூ.30 இலட்சத்தினை அவருடைய தொகுதியிலிருக்கின்ற திசையன்விளை பணிமனைக்கு வழங்கியிருக்கிறார்கள். பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களோடு தொடங்கி, 25 சட்டமன்ற உறுப்பினர்களின் பெயர் பட்டியல் இருக்கிறது. நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் ரூபாய் இருபது இலட்சம், ரூபாய் முப்பது இலட்சம் என வழங்கி அந்தப் பணிமனைகளுக்கான பணிகள் இன்றைக்கு நடைபெற்று கொண்டிருக்கின்றன. இதனைச் சொல்வதற்கு காரணம். . .

நம்முடைய மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அண்ணன் மா. சுப்பிரமணியன் அவர்களும் கொடுத்திருக்கிறார்கள். ஒரு பெரிய பட்டியலே இருக்கிறது. இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் பின்னால் இருந்து தட்டுகிறார்கள். (குறுக்கீடு) அவர்களெல்லாம் MLA நிதியிலிருந்து பணிமனையினை repair செய்வதற்கு பணம் கொடுத்தார்கள். (குறுக்கீடு) மொத்தமாக நன்றி சொல்லிவிடுகிறேன். அவை முன்னவர் அவர்களின் அறிவுரைப்படி, மொத்தமாக அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல முக்கியமான சில கோரிக்கைகள். சங்கராபுரம் தொகுதிக்குட்பட்ட கல்வராயன் மலையிலே கீழிருந்து மலைமீது பேருந்துகள் செல்கின்ற காரணத்தினால், அங்கே விடியல் பயணத் திட்ட பேருந்துகளை இயக்க முடியவில்லையென்று உறுப்பினர் தா. உதயசூரியன் அவர்கள் கோரிக்கை வைத்திருக்கிறார். அங்கு இருக்கின்ற ஒரு பேருந்து நிலையத்தினை பேருந்து பணிமனையாக மாற்றியமைத்து, அங்கே பேருந்துகளை நிறுத்தி வைத்து விடியல் பயணத் திட்டப் பேருந்துகளை இயக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள்.

அதேபோல புதிதாக அமைக்கப்பட்டிருக்கின்ற வாணாபுரம் என்ற வட்டத்தில், ரிஷிவந்தியம் தொகுதியில் உறுப்பினர் க. கார்த்திகேயன் அவர்கள் ஒரு பணிமனை அமைக்க வேண்டுமென்று ஒரு கோரிக்கை வைத்துள்ளார்கள். என்ன பிரச்சினையென்றால், நம்முடைய துறையில் நிதி இல்லாத ஒரு சூழல்தான் இருக்கிறது. நமக்கு நாமே திட்டத்திலோ, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலோ அல்லது அவர்கள் சொந்த பொறுப்பிலோ அந்தப் பணிமனை அமைப்பதற்கான பணிகளைச் செய்தால், அந்தப் பணிமனைகளை இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்ற அந்தச் செய்தியினை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். அடுத்ததாக அறிவிப்புகள். அறிவிப்புகள் புத்தகம் கொடுங்கள். (குறுக்கீடு) காட்பாடிக்கும் அவை முன்னவர் அவர்கள் அவர்களுடைய சொந்த நிதியிலே அதற்கான பணிகளை அமைத்து கொடுக்கின்றபோது அந்தப் பணிமனை அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### அறிவிப்புகள்

### போக்குவரத்துத் துறை

**1. மாநகர் போக்குவரத்துக் கழகம், சென்னையின்கீழ் செயல்படும் ஆறு பேருந்து முனையங்களை மேம்படுத்துதல்**

பேருந்து முனையங்கள், தினமும் பல்லாயிரக்கணக்கான பயணிகளுக்கு பொதுப் போக்குவரத்து சேவை அளிப்பதில் முக்கிய பங்கு வகிக்கின்றன. அதிகரித்துவரும் பயணிகளின் வருகையை கையாளுவதற்கும், தடையற்ற பொதுப் போக்குவரத்து இயக்கத்தை உறுதி செய்வதற்கும், மாநகர் போக்குவரத்துக் கழகம், சென்னையின்கீழ் செயல்படும் அயனாவரம், முகப்பேர் (கிழக்கு), எம்.எம்.டி.ஏ. காலனி திருவேற்காடு, பெசன்ட் நகர் மற்றும் கண்ணகி நகர் ஆகிய ஆறு பேருந்து முனையங்களில், பயணிகளுக்கு தேவையான இருக்கைகள், நேரக்காப்பாளர் அறை, கழிப்பறை வசதி, பயணிகள் காத்திருப்புப் பகுதி, சுத்தமான குடிநீர் மற்றும் தரைத்தள வசதிகள் உள்ளிட்டவை ரூ.7.5 கோடி செலவில் மேம்படுத்தப்படும்.

**2. அரசு நிதி உதவிமூலம் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு விபத்து இழப்பீட்டுத் தொகை வழங்கி தீர்வு காணல்**

தமிழ்நாட்டில், பொது போக்குவரத்துக்காக எட்டு அரசு போக்குவரத்துக் கழகங்களின்மூலம், தினசரி 20,508 பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. நிதித் தட்டுப்பாடு காரணமாக, அரசு போக்குவரத்துக் கழகங்கள், மோட்டார் வாகன விபத்து இழப்பீடு தீர்ப்பாயத்தின்மூலம் வழங்கப்பட்ட தீர்ப்புகளின் அடிப்படையில் விபத்து இழப்பீட்டு தொகையை தீர்வு செய்வதில் சவால்களை எதிர்கொள்கின்றன.

இந்தப் பிரச்சினையை தீர்க்க, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களுக்காக

ரூ.642.82 கோடியை, தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம் பெற்று, நிலுவையில் உள்ள விபத்து இழப்பீட்டுத் தொகையை வழங்கும். இதன்மூலம் சட்ட விளைவுகள் தவிர்க்கப்பட்டு, தீர்வுகள் விரைவுபடுத்தப்பட்டு, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்கள் மீதான நிதிச்சுமை குறைக்கப்பட்டு, பொதுப் போக்குவரத்து சேவைகளின் ஒட்டுமொத்த தரம் மேம்படுத்தப்படும். இதற்காக, தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம் கடனாக வாங்கிய ரூ.642.82 கோடியை செலுத்த, அரசு ஆண்டுக்கு ரூ.100 கோடி வீதம், 10 ஆண்டுகளுக்கு தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்திற்கு வழங்கும்.

அரசு நிதி உதவிமூலம் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு விபத்து இழப்பீட்டுத் தொகை வழங்கி தீர்வு காணப்படும். ஏனென்றால் கடந்த காலங்களில் அந்த இழப்பீடு வழங்குவதில் பல்வேறு பிரச்சினைகள் இருப்பதால், இன்றைக்கு அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

**3. பணிமனைகளில் பேருந்துகளை சுத்தம் செய்ய தேவையான நவீன இயந்திரங்கள் மற்றும் கருவிகள் போன்ற அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல்**

பணிமனைகளில் பேருந்துகளின் வெளிப்புறங்களை சுத்தம் செய்யும் தானியங்கி பேருந்து கழுவும் இயந்திரம், அடிச்சட்டத்தை சுத்தம் செய்யும் தண்ணீர் பீய்ச்சும் இயந்திரம் (Car Washer Unit), பேருந்துகளின் உட்புறம் மற்றும் பயணிகளின் இருக்கையை சுத்தம் செய்ய தூசி உறிஞ்சும் இயந்திரம் (Vaccum Cleaner) ஆகியவற்றை மேம்படுத்தி, பேருந்துகளை சுத்தம் செய்வதால், பயணிகளின் சேவைத் தரத்தை மேம்படுத்துவது மட்டுமல்லாமல், பேருந்துகளின் ஆயுட்காலமும் அதிகரிக்க வழிவகை செய்யும். மேலும், இதன்மூலம் சுத்தம் செய்யும் நேரத்தை குறைத்து, செயல்திறனை உயர்த்தி, அனைத்துப் பேருந்துகளையும் பராமரிக்க இயலும். இத்திட்டத்தின் கீழ், அடுத்த கட்டமாக, ஒரு பணிமனைக்கு ரூ.10 இலட்சம் வீதம், 100 பணிமனைகளுக்கு, ரூ.10 கோடி செலவில் செயல்படுத்தப்படும்.

**4. பேருந்து பணிமனைகளில் பணியாளர்கள் பயன்படுத்தும் ஒப்பனை அறைகளை 100 பணிமனைகளில் மேம்படுத்துதல்**

பேருந்து பணிமனைகளில் பணிபுரியும் பணியாளர்களின் அடிப்படை வசதிகளில் முக்கிய பங்களிக்கும் ஒப்பனை அறைகள், நவீன வசதிகளுடன்கூடிய சாதனங்கள், தரைகள் மற்றும் சுவர்கள் உள்ளிட்டவற்றை மாற்றுத் திறனாளிகளுக்கும் உகந்த வகையில், 100 பேருந்து பணிமனைகளில் மேம்படுத்தப்படும். இதனால் பணிமனைகளில் நிருவாகத்திற்கும், பணியாளர்களுக்கும் இடையிலான தொழில் உறவு மற்றும் பணிமனை செயல்பாட்டுத் திறன் மேம்பட பெரிதும் உதவும். இத்திட்டத்தின்கீழ், அடுத்த கட்டமாக,

ஒரு பணிமனைக்கு ரூ.10 இலட்சம் வீதம், 100 பணிமனைகளில், ரூ.10 கோடி செலவில் ஒப்பனை அறைகள் மேம்படுத்தப்படும்.

**5. அதிநவீன உபகரணங்கள் மற்றும் கருவிகள்மூலம் தொழில்நுட்ப உற்பத்தித்திறனை பணிமனைகளில் அதிகரித்தல்**

பேருந்து பணிமனைகளின் பராமரிப்பில் தொழில்நுட்ப உற்பத்தித்திறனை அதிகரிக்க, அதிநவீன உபகரணங்கள் மற்றும் கண்டறியும் கருவிகளை பயன்படுத்துவதனால் செயல்திறன் மற்றும் தரம் மேம்படுவதன்மூலம், தடையற்ற பேருந்து சேவையினை அளிப்பதோடு மட்டுமல்லாமல், தொழில்நுட்ப பணியாளர்களின் வேலைப்பளு குறைவதுடன், பாதுகாப்பான பணிச்சூழலை மேம்படுத்த பெரிதும் உதவும். இத்திட்டத்தின் கீழ், அடுத்த கட்டமாக, ஒரு பணிமனைக்கு ரூ. 1.05 கோடி வீதம், எட்டு பணிமனைகளுக்கு ரூ.8.4 கோடி செலவில் அதிநவீன உபகரணங்கள் வழங்கப்பட்டு தொழில்நுட்ப உற்பத்தித்திறன் அதிகரிக்கப்படும்.

**6. தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் 50 பேருந்து பணிமனைகளில் உள்கட்டமைப்புகளை புதுப்பித்தல்**

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களின் பேருந்து பணிமனைகளின் பாதுகாப்பு, செயல்திறன் மற்றும் நீடித்துழைப்பை மேம்படுத்த, ஒரு விரிவான கட்டட உள்கட்டமைப்பை புதுப்பித்தல் திட்டம் 50 பணிமனைகளில் செயல்படுத்தப்படும்.

இதன்படி, கட்டடம் புதுப்பித்தல், தரைதளம் மேம்பாடு, சுற்றுச்சுவர் புனரமைப்பு மற்றும் வடிகால் அமைப்பு மேம்பாடு, LED விளக்குகள் பொருத்துதல் மற்றும் நவீன வாகன பராமரிப்புக் குழிகள் அமைத்தல் ஆகியவை மேம்பாட்டு பணிகளில் அடங்கும். இத்திட்டத்தின்கீழ், ஒரு பணிமனைக்கு ரூ.1.5 கோடி வீதம், 50 பணிமனைகள் ரூ.75 கோடி செலவில் புதுப்பிக்கப்படும்.

தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் 50 பேருந்து பணிமனைகளில் உள்கட்டமைப்புகள் ரூ.75 கோடி செலவில் புதுப்பிக்கப்படும்.

**7. தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களின் 100 பேருந்து பணிமனைகளில், நைட்ரஜன் காற்று நிரப்பும் இயந்திரங்களை அமைத்து உருளிப்பட்டை (Tyre) பராமரிப்பை மேம்படுத்துதல்**

வாகன பராமரிப்பை மேம்படுத்தும் வகையிலும், உருளிப்பட்டைகளில் (Tyres) நிலையான காற்றழுத்தத்தை அதிக நாட்கள் நீடிக்கும் வகையிலும், எரிபொருள் திறனை அதிகரிக்கவும், பயணிகளின் பாதுகாப்பை மேம்படுத்தவும், உருளிப்பட்டைகளின் ஆயுட்காலத்தை நீட்டிக்கவும், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களின் 100 பேருந்து பணிமனைகளில் நைட்ரஜன் காற்று நிரப்பும் இயந்திரங்கள் அமைக்கப்படும். இத்திட்டத்தின்கீழ், ஒரு பணிமனைக்கு ரூ.2.5 இலட்சம் வீதம், 100 பணிமனைகளுக்கு ரூ.2.50 கோடி செலவிடப்படும்.

**8. போக்குவரத்துக் கழக பேருந்துகளில் நான்கு வெளிப்புற கேமராக்களை பொருத்துவதன்மூலம் விபத்துகளைத் தடுத்தல்**

பேருந்துகளில் 360 டிகிரி கேமராக்கள் பொருத்துவதனால், பார்வைபடாத இடங்களில் (Blind Spot) பாதசாரிகள், சைக்கிள் ஓட்டுபவர்கள் மற்றும் பிற வாகனங்கள் பயணிப்பதை கண்டறிவதன்மூலம் பாதுகாப்பு மேம்படுத்தப்படுகிறது. குறிப்பாக, நெரிசல் மிகுந்த பகுதிகளில் பேருந்துகளை பாதுகாப்பாக இயக்குவதற்கு உதவுகிறது. பேருந்து நகர்வு வீடியோ காட்சிகளாக நிகழ்நேரத்தில் பதிவு செய்யப்படுவதால்,

தொடர்ச்சி 14 – ஆம் பக்கம்